# *6. சுப்பிரமணியப்பரமம்.*

**க**டல்கோலு நிலையிலுன் கருணையொன் றுண்டெனிற்
காசும் பெறாததுகளுங்
கைலைவை குந்தமம ராவதியு மெச்சவே
கனமேரு வாகுமிலையேல்
தடமகா மேருபோ லுளதுஞ் சணத்திலே
தண்ணியவொர் திரணமாகுஞ்
சரதமுத வெந்தையே யிவ்வுண்மை யறியாது
தஞ்சத்தி கொண்டுழிதரும்
படருளா ரதரெனைப் பற்றா தகற்றிநற்
பரிவோ டுனக்குமெற்கும்
பற்றிருக் கும்படி புரிந்தவருண் முழுவதும்
பக்ஷம்வைத் தருள்செயாதோ
சுடர்களைச் சுடரவே செய்பரஞ் சுடரே
சுகாதீத முத்திமுதலே
துங்கபரி பூரண வகண்டதத் துவமான
சுப்பிரமணி யப்பரமமே. 1

**க**த்தாவை நாம்பிரிய விலையென் றியாதொரு
கணிப்புற்ற தைக்கழுத்திற்
கட்டியே தூங்கவைத் ததுபோல வுளபடி
கருத்திலே கட்டவறியார்
வித்தார ஞானநூ லைப்பெட்ட கத்துளே
மேன்மையா வைத்துமூடி
வீகமிட் டதுநேர வுட்பொருளை யுள்ளுளே
மெய்யாக வைக்கவறியார்

1. **கோலல்** = சூழ்தல்; **சேந்தன் றிவாகரம். திரணம்** = துரும்பு.
2. **வீகம்** = மோதிரம் போன்ற பூட்டு; **சூ - நிகண்டு.**

சத்தான தெய்வமொன் றுண்டென்று கூறுவார்
சந்தேக நீக்கமறியார்
தமியனே னிந்தவவ லங்களுக் கயலுறத்
தண்ணளி புரிந்தவுன்றன்
சொத்துவச் சித்தமெம் பாக்கிய மலால்வேறு
சொல்லவொரு சிறிதுமுண்டோ
துங்கபரி பூரண வகண்டதத் துவமான
சுப்பிரமணி யப்பரமமே. 2

**பி**றர்நயன மறியாது துய்த்தலைப் புல்லர்நுகர்
பிழியூன் விலக்கியுணலைப்
பிரபாவ மணவுகண் மணிமாலை யேமம்
பெருக்கவணி நேமத்தினைச்
சிறுமையர் தமைப்பரி சனஞ்செயா வுழுவலைத்
திவ்வியசிவ சம்பந்தமாச்
செப்புநற் சைவசம யத்தாளி யென்றெனுஞ்
சிந்தையர் சிதாகாசமாய்
நிறுவுமுன் னோடுமல மற்றநல் லாவியது
நீநா னெனாமலொன்றாய்
நிகழ்தல்சிவ சம்பந்த மென்றுமது வேசைவ
நெறியந்த மென்றுமரிய
துறவரா லுணர்நிசா தனமறிதல் சுலபமோ
சுபவின்ப மாவுததியே
துங்கபரி பூரண வகண்டதத் துவமான
சுப்பிரமணி யப்பரமமே. 3

---

2. **சொத்துவம்** - 'ஸ்வதத்வம்' என்பதன் விகாரம்; (சொந்த) உரிமையென்னும் பொருளுடைத்து.

3. **பிழி** = கள். **உழுவல்** = குணம், முறை; **சே - திவாகரம்.** **ஆளி** = நிரல்; **சூ - நிகண்டு.**

**சீ**வகா ருணியமின் றுயிர்வதைப் பவருந்
தெருட்சியா சாரமின்றித்
தீழ்ப்புடை யிலாகரி புலாலுண் சழக்கருஞ்
சிவமந்தி ரஞ்செபிக்கப்
பாவன விலிங்கதா ரணமென்ப தைக்கொளப்
பாத்திய மிலாதவரெனாப்
பகர்சைவ தந்திரந் தனைமீறு பவரும்
பசுந்துளவ மணிபவற்குக்
கோவுறு மிலாகரி புலால்படைத் துண்ணுங்
குணுங்குகளு மிறுதிநாளிற்
கொடியபூ தப்பிசா சின்கதியை யடைதல்சூர்
கூர்தல்கட் டென்றுமிக்க
தூவுடைய முதனூல் விளக்கல்பொய் யன்றரோ
துகளிலார் நெறியில்வருவோய்
துங்கபரி பூரண வகண்டதத் துவமான
சுப்பிரமணி யப்பரமமே. 4

**அ**க்கநெரி வுழியெழுங் கானலைப் பார்வையா
லம்புலியை யாதித்தனை
அவிர்கின்ற தீபிகையை நோக்கியே பாவிக்கு
மகவினையி னான்மனத்தே
சொக்குறத் தோன்றொளிக ளைத்தெவுளு மசபையிற்
சுடரொளியை விந்துநாத
சோதியைச் சுத்தபர மாயையின் காந்தியைத்
துரியச் சுயஞ்சோதியாய்

---

4. **தீழ்ப்பு** – தீட்பு என்பதன் விகாரம்; இழிவெனும் பொருட்டு; இதனிலக்கணம் பரிபூரணானந்த போதத்துப் பிற்படலத்து 29 – ன் உரையிலோருமாறுளது.

**கோவுறுமிலாகரி** = நீர்வடிவான இலாகரி; கள், சாராயம் முதலியன; **கோ** = நீர். **குணுங்கு** = பேய்; **உரிச்சொல் நிகண்டு** காண்க. **பிசிதம்** = ஊன், இதனை யுண்ணுமுயிர் ‘பிசாசம்’ என்னும் பெயர்பெற்றதென்று **பட்டோசி வியாகரணம்** பகர்கின்றது.

5. **கானல்** = ஒளி; **பி – நிகண்டு** காண்க. **சொக்கு** = அழகு. **தெவுளல்** = பெருகல்; **சே – திவாகரம்;** ‘தெவிளல்’ எனவும் வழங்கப்படுகிறது.

எக்கணு மியங்குநீ யென்றெண்ணி மெய்ச்சோதி
யினையறிந் திலகுபெரியோர்
என்பர்நா மென்றகங் காரமுறு மூடமிவ்
வேழைக்கும் வருவதுண்டோ
துக்கமில் லாதபரி சுத்தசுக வாழ்வையென்
சொந்தப் படுத்துமரசே
துங்கபரி பூரண வகண்டதத் துவமான
சுப்பிரமணி யப்பரமமே. 5

**வெ**குசனத் தொறுவொன்று சேரநன் மாமக
விழாவங் குடந்தையின்கண்
வியப்பா நடக்கவருள் செய்தெனையு மாண்டுற
விதித்துநான் மீளுமமையந்
தகுதிசா லித்திருப் பாவெனும் புத்தகந்
தனின்முதற் செய்யுளெனவே
சாற்றுபா ராதிதொட் டக்கநெரி வென்றெழு
தனிப்பாடல் வரையைம்பதும்
மிகுமெட்டு முடையவொரு பிரதியையு னன்பினர்
விலோசனங் கட்குமறைவாய்
வேறொருவர் கைக்கொள வமைத்தையிங னேயுனது
மேதைக் கருத்தென்கொலோ
சுகுணவரர் முதல்வவென் மனதுறுவல் கூராது
சொல்லியருள் புரியவேண்டுந்
துங்கபரி பூரண வகண்டதத் துவமான
சுப்பிரமணி யப்பரமமே. 6

**நி**ன்பூர ணத்துவ வியாபகத் துண்மையை
நிரப்பின்றி யுற்றுநோக்கின்
நித்தமு மனித்தமுஞ் சுத்தமு மசுத்தமு
நிராகார வாகாரமும்

6. **வெகுசனம்** - 'பஹுஜநம்' என்னும் வடமொழியின் விகாரம்.
**உறுவல்** = துக்கம்; **பி - நிகண்டு.**

அன்போடு கடினமுஞ் சஞ்சல வசஞ்சலமு
மாண்பெண் ணெனும்பேதமும்
அந்தரமு மாதவமு மானந்த முந்துயரு
மாசையு நிராசைநிலையும்
என்போலு மிழுதையு மெலாந்தெரி விவேகியு
மிரண்டொன் றெனப்பிதற்றற்
கிசைந்தநூல் கற்றுளா ரோடுகல் லாதவரு
மின்னுமற் றுள்ளவெவையுந்
துன்பேது மற்றநீ யேயென்ன வாமிதிற்
சொல்லுமெற் கிடனெங்ஙனே
துங்கபரி பூரண வகண்டதத் துவமான
சுப்பிரமணி யப்பரமமே. 7

**எ**ல்லாஞ் சிவன்செய லெனுந்தகைமை தனையுணரி
னிரவுபக லற்றநிலயம்
எட்டாது போமோ பிராணசல மும்போத
மென்றகுடி லச்சலனமுஞ்
சொல்லாக ரங்கருதி யிருவினைக ளென்னுமலை
தொட்டிலி லிருந்துதுவளுஞ்
சூர்மனமு மம்மனஞ் சென்றுவரு மிந்தியத்
தொறுவுமவை பற்றிநிற்றற்
கில்லான படிவமு மப்படிவ வோம்பலா
னெழுகின்ற வபிமானமும்
இகலாய காமாதி யாறுபெற் றியுமா
யிராநின்ற சீவச்செயல்
சொல்லாம லோடுமல் லாதுபின் றொடருமோ
துரியவிவ் வுணர்வையருளே
துங்கபரி பூரண வகண்டதத் துவமான
சுப்பிரமணி யப்பரமமே. 8

7. **அந்தரம்** = இருள்.

8. **சொல்லாகரம்** = புகழும், உறைவிடமும்; **சொல்** = புகழ், **தொறு** = கூட்டம்.

**பை**யண்ட மண்கசிவு மானச மெனச்சொலைம்
பாலுழி யுதித்தவெல்லாப்
பசுக்களுக் கும்பிரா னென்பதை விளக்கிடப்
பசுபதிப் பெயருடையனாய்
மெய்கண்ட தேவர்முத லோருமரு ளாதிக்கிய
மெய்க்குரவர் நான்குபேரும்
மெய்யா விரித்ததிரு வாக்குகட் குண்ணிற்கு
மெய்வத்து வாய்விரியுமென்
ஐயநின் பெரியதிரு வருளையே முன்னிட்
டனாரதமு நிற்குமிந்த
அடிமைகா ரியமிநாண் மலைகல்லி யெலிபிடிப்
பதுபோ லிருப்பதென்னின்
தொய்யன்மரு வாதவுன் றொண்டர்க ளடைந்தவொரு
தொய்யலெவ் வாறுகுறுகுந்
துங்கபரி பூரண வகண்டதத் துவமான
சுப்பிரமணி யப்பரமமே. 9

**ப**ரமதா தாவாய நீயெனை யணைத்தருள்
பணிக்காது விடுவதென்னிற்
பாலித்து நல்லருள் புரப்பதா யருள்செய்த
பக்ஷமுடை யுன்றன்வசனந்
தரமிலா மற்பழுது படுமென்ற னெஞ்சுமதி
சஞ்சலப் படுமின்னணஞ்
சாருமே லென்னெண்ண மெவ்வண்ண முற்றுறுஞ்
சஞ்சிதத் தாலெடுத்த
புரமளவு முள்ளவா ணாளெப்ப டிச்செலும்
புகலுன்னை யன்றியிலையே
புங்கவர்கள் கடவுளே புரிவுடையர் செம்மலே
புனிறுமர பற்றபொருளே

9. தொய்யல் 2 - ல் முன்னையது துயரம்,
பின்னையது மகிழ்ச்சி; **யகர வெதுகை.**

10. **பணித்தல்** = தியாகம்; **சே - திவாகரம்.**

**சஞ்சிதத்தா லெடுத்தபுரம்** = சஞ்சிதகன்ம வழிவந்த பிராரத்த சரீரம்.

சுரர்புகழ வுளவெந்தை யருணகிரி பிரசன்ன
சுவானுபூ திச்செல்வமே
துங்கபரி பூரண வகண்டதத் துவமான
சுப்பிரமணி யப்பரமமே.